C.O.E.T. K

**கடலூர் வணிகவரி மாவட்ட துணை ஆணையர்(மாவ)(முகூபொ) அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு. சி. ஆறுமுகம்**

ந.க. அ1/2198/2017 நாள்: 05.12.2018.

பொருள்: பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - கடலூர் வணிகவரி மாவட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தொகுதி IV பணிகள் - 2015-16 - மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட தட்டச்சர்கள்- பணிவரன்முறை ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண். 5617/PSD-A2/2017 நாள்: 18.09.2017.
2. இணை ஆணையர்(வவ), வேலூர் கோட்டம், வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க. ஆ2/4856/2017 நாள்: 03.11.2017.
3. இவ்வலுவலக செயல்முறை ந.க. அ1/2198/2017 நாள்: 13.11.2017.

உதவி ஆணையர் (வவ) அலுவலகம், கடலூர் புறநகர், கடலூர்-1. 10 DEC 2018

----------

**ஆணை:**

பார்வை 1 ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015-16 ஆம் ஆண்டு தொகுதி -IV, நேரடி நியமனம் மூலம் தட்டச்சர்களாக தெரிவு செய்யப்பட்டு பார்வை-2 ல் காணும் வேலூர் கோட்ட இணை ஆணையர்(மாவ) அவர்களின் செயல்முறைகளின்படி கடலூர் வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3 ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி இவ்வணிகவரி மாவட்டத்தில் பணிநியமனம் செய்யப்பட்ட பின்வரும் தட்டச்சர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் தொடங்கியும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | தட்டச்சர்களின் பெயர் | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | செல்வி. பி. வரலட்சுமி | உதவி ஆணையர்(மாவ) அலுவலகம், விருத்தாசலம் | 13.11.2017 முற்பகல் | 13.11.2017 முற்பகல் |
| 2. | திரு. ச. தியாகராஜன் | உதவி ஆணையர்(மாவ) அலுவலகம், கடலூர்(புறநகர்) | 17.11.2017 முற்பகல் | 17.11.2017 முற்பகல் |
| 3. | திரு. மு. சரவணன் | துணை ஆணையர்(மாவ) அலுவலகம், கடலூர் | 23.11.2017 முற்பகல் | 23.11.2017 முற்பகல் |

மேற்காணும் தனியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும் எனவும் தகுதிகாண் பருவகாலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் " Certificate Course in Computer on Office Automation" தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஒம்/-) சி. ஆறுமுகம்
துணை ஆணையர்(மாவ)(முகூ.பொ)
கடலூர்

பெறுநர்
மேற்காணும் தனியாளர்கள்
(அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல்: உதவி ஆணையர்(மாவ), கடலூர்(புறநகர்) மற்றும் விருத்தாசலம்.
நகல்: இணை ஆணையர்(வவ) வேலூர்க் கோட்டம் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து அனுப்பப்படுகிறது.

உண்மை நகல்/உத்தரவுப்படி

மாநிலவரி அலுவலர்/மேலாளர்